செ.வெ.எண்: 48 நாள்:17.08.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலில் 2525 எண்ணிக்கையில் வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்படவுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் எதிர்வரும் உள்ளாட்சி தேர்தல்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய காவல் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து உள்ளாட்சித்துறை, வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அலுவலர்கள் பங்கேற்ற ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17.08.2016) நடைபெற்றது.

இந்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழகத்தில் விரைவில் உள்ளாட்சி தேர்தல் 2016 நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு நமது மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தல்-2016ஐ சிறப்பாக நடத்தும் வகையில் மேற்கொள்ளப்படவேண்டிய பல்வேறு பணிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பல்வேறு துறை அலுவலர்கள் பங்கேற்ற ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் இதர தேர்தல் பொருட்கள் வைக்கப்படும் இடங்களுக்கு வழங்கப்படவேண்டிய காவல்துறை பாதுகாப்பு குறித்தும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பதற்றமான வாக்குச்சாவடிகளை கண்டறிதல் மற்றும் வாக்குப்பதிவு பொருட்களை வாக்குப்பதிவு மையங்களுக்கு பாதுகாப்பாக கொண்டு செல்வது குறித்தும் அலுவலர்களுடன் விரிவாக விவாதிக்கப்பட்டது.

நமது மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2252 வாக்குப்பதிவு மையங்களும், நகராட்சிகளுக்கு 152 வாக்குப்பதிவு மையங்களும், பேரூராட்சிகளுக்கு 121 வாக்குப்பதிவு மையங்களும் என மொத்தம் 2525 வாக்குப்பதிவு மையங்கள் வாக்காளர்கள் வாக்களிக்கும் வகையில் அமைக்கப்படவுள்ளது. மேலும் வாக்கு எண்ணும் மையங்களை தேர்வு செய்வது குறித்து உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் வாக்கு எண்ணும் மையங்களை உடனடியாக ஆய்வு செய்து அதன் விபரத்தினை தெரிவிக்க அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., மாவட்ட திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திரு.சந்தோஷ்குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) (பொ) திரு.முருகண்ணன், அனைத்து வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி செயல்அலுவலர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**